# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology















# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology













# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology













# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology
















# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology
















# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology


















# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology















# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology


















# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology


















# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology
















# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology


















# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology












# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology

தினத்தந்தி

கோவை 21-8-2015 15



ஊட்டி ஏரியை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றதை படத்தில் காணலாம்.

## ஊட்டி ஏரியை அழகுபடுத்தி பாதுகாக்க ரூ.7 கோடி ஒதுக்கீடு

### கலெக்டர் சங்கர் தகவல்

ஊட்டி, ஆக.21-

ஊட்டி ஏரியை அழகு படுத்தி பாதுகாக்கவும், கோடப்பமந்து கால்வாயை பராமரிப்பதற்காகவும் தமிழக அரசு ரூ.7 கோடி நிதி ஒதுக்கி உள்ளதாக மாவட்ட கலெக்டர் சங்கர் தெரிவித்து உள்ளார்.

#### விழிப்புணர்வு பேரணி

ஊட்டி ஏரியை பாதுகாப்பது குறித்தும், கோடப்பமந்து கால்வாயை பராமரிப்பது தொடர்பாக பொதுமக்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணி ஊட்டியில் நேற்று நடைபெற்றது. பேரணியை மாவட்ட கலெக்டர் சங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் அவர் பேசும்போது கூறியதாவது:-

ஊட்டி நகரின் பிரதான கால்வாயாக கோடப்பமந்து கால்வாய் உள்ளது. இந்த கால்வாயில் மண் மற்றும் சகதி, குப்பைகள், கழிவுகள் சேராமல் இருக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

#### ரூ.7 கோடி ஒதுக்கீடு

ஊட்டி ஏரியை அழகுபடுத்தி, பாதுகாக்கவும், கோடப்பமந்து கால்வாயை பராமரிக்கவும் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக கடந்த 3 ஆண்டுகளில் ரூ.7 கோடி நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்த நிதியில் இருந்து ஏரியும், கோடப்பமந்து கால்வாயும் சந்திக்கும் இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டு உள்ளது.

இதன்மூலம் கால்வாயில் வரும் கழிவுநீர், சுத்திகரிக்கப்பட்டு பின்னர் ஏரிக்கு திறந்து விடப்படுகிறது. இதுதவிர மேல்கோடப்பமந்து பகுதியில் இருந்து மழைக்காலங்களில் மண் அரிப்பு ஏற்பட்டு கோடப்பமந்து கால்வாயில் மண் கலப்பதை தடுக்க வேளாண் பொறியியல் துறை சார்பில் சிறு தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகின்றன.

#### தடுப்பணைகள்

கோடப்பமந்து கால்வாயில் காந்தி மைதானம், மத்திய பஸ் நிலையம் ஆகிய பகுதிகளில் கருங்கற்களினால் சிறு தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகிறது. இந்த தடுப்பணைகளில் கால்வாயில் அடித்து வரப்படும் மண் சேகரமாகும். இதனை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் அவ்வப்போது அகற்றுவார்கள். பொது மக்கள் ஊட்டி ஏரியை சுத்தமாக வைத்து இருக்கவும், கோடப்பமந்து கால்வாயை பராமரிக்கவும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். எனவே கால்வாயில் குப்பைகளை கொட்டுவது உள்ளிட்ட செயல்களில் ஈடுபட வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.

விழிப்புணர்வு பேரணி ஊட்டி மத்திய பஸ் நிலையம் அருகே தொடங்கி லோயர் பஜார், மாரியம்மன் கோவில், கமர்சியல் சாலை, சேரிங் கிராஸ் வழியாக ஊட்டி மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட மைதானத்தில் நிறைவடைந்தது. இந்த பேரணியில் நகராட்சி கமிஷனர் (பொறுப்பு) ரூபன் சுரேஷ், மண்டல சுற்றுலா வளர்ச்சி கழக மேலாளர் சங்கர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) கண்ணழகன், பள்ளி மாணவ- மாணவிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தினகரன்

வெள்ளிக்கிழமை 21.8.2015




ஊட்டி ஏரி மற்றும் கோடப்பமந்து கால்வாயை பாதுகாக்க கோரி பள்ளி மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி, ஊட்டி நகராட்சி சார்பில் நேற்று நடந்தது.

## ஊட்டி ஏரியை பாதுகாக்க வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி

**ஊட்டி, ஆக. 21:** ஊட்டி ஏரியை பாதுகாக்க வலியுறுத்தி பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வண்ணம் விழிப்புணர்வு பேரணி ஊட்டியில் நடந்தது. ஊட்டி ஏரியும் மாசடைந்து வருகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு கோடப்பமந்து கால்வாய் மற்றும் ஊட்டி ஏரியை பாதுகாக்க வலியுறுத்தி, மாவட்ட நிர்வாகம், ஊட்டி நகராட்சி மற்றும் கூடு தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆகியவை சார்பில் விழிப்புணர்வு பேரணி நடந்தது.

மத்திய பஸ் நிலையம் அருகே நடந்த நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சங்கர் பேரணியை துவக்கி வைத்து பேசுகையில், 'ஊட்டி நகரின் அழகையும், தூய்மையையும் பாதுகாக்கும் பொருட்டு கடந்த 3 ஆண்டுகளில் அரசு ரூ.7 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் 90 சதவீத பணி முடிக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் ஊட்டி ஏரியை பாதுகாக்கும் பொருட்டு அவற்றை தூய்மையாக வைத்து கொள்ள வேண்டும்', என்றார். தொடர்ந்து பேரணி லோயர் பஜார் சாலை, கமர்சியல் சாலை, பூங்கா சாலை வழியாக எச்.ஏ.டி.பி., மைதானத்தில் நிறைவடைந்தது. பேரணியில் கலந்து கொண்ட மாணவர்கள் ஊட்டியை ஏரியை பாதுகாக்கும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி சென்றனர். இந்நிகழ்ச்சியில் ஊட்டி நகராட்சி ஆணையர் (பொறுப்பு) ரூபன் சுரேஷ், ஊட்டி டவுன் டி.எஸ்.பி., முருகசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# Ooty Lake Conservation - Awareness Campaign - Methodology

தினமலர்
கோயம்புத்தூர் | வெள்ளி | 21.8.2015
KN 11

## 'கோடப்பமந்து கால்வாயை சுத்தமா வைக்கணும்' விழிப்புணர்வு பேரணியில் மாணவியர் கோஷம்




ஊட்டி ஏரியை பாதுகாக்க வலியுறுத்தி, நடந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் பங்கேற்ற மாணவியர்.

**ஊட்டி, ஆக. 21–**
ஊட்டி ஏரியின் நீர் வரத்தான கோடப்பமந்து கால்வாயை சுத்தமாக வைப்பது குறித்த விழிப்புணர்வு பேரணி, ஊட்டியில் நடந்தது.

ஊட்டி ஏரி நீரை சுத்தப்படுத்தும் அரசு திட்டத்தின் தொடர்ச்சியாக, ஏரிக்கு பிரதான நீர் வரத்தாக உள்ள கோடப்பமந்து கால்வாயை, சுத்தமாக வைப்பது தொடர்பான விழிப்புணர்வு பேரணி நேற்று நடந்தது.

மாவட்ட கலெக்டர் சங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். அவர் கூறுகையில், "ஊட்டி ஏரி நீரை சுத்தப்படுத்தவும், அதன் நீர் வரத்தான கோடப்பமந்து கால்வாயை சுத்தமாக வைக்கவும், கடந்த, மூன்று ஆண்டுகளில் மட்டும், மாநில அரசு, 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது; 90 சதவீத பணிகள் முழுமைப் பெற்றுள்ளன. எனவே, கோடப்பமந்து கால்வாயில், குப்பை, கழிவுகளை பொதுமக்கள், ஓட்டல், வணிக நிறுவனங்கள் கொட்டக் கூடாது," என்றார்.

பேரணியில் பங்கேற்ற பள்ளி மாணவ, மாணவியர், 'கால்வாயில் குப்பைகளை கொட்டக் கூடாது; மழை நீரை சேமிக்க வேண்டும்' என்பது போன்ற வாசகங்கள் அடங்கிய பேனரை ஏந்தியவாறு சென்றனர். ஊட்டி நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்ற பேரணி, மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட திறந்தவெளி மைதானத்தில் நிறைவு பெற்றது. பேரணியில், ஊட்டி நகராட்சி கமிஷனர் (கூடுதல் பொறுப்பு) ரூபன் சுரேஷ், நகராட்சி தலைவி சத்தியபாமா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மண்டல மேலாளர் சங்கர், ஊட்டி டி.எஸ்.பி., முருகுசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

---

வெள்ளிக்கிழமை, 21 ஆகஸ்ட், 2015

## தூய்மையை வலியுறுத்தி விழிப்புணர்வுப் பேரணி

உதகை, ஆக. 20: உதகை ஏரி, நகரப் பகுதிகளின் தூய்மையை வலியுறுத்தி மாணவ, மாணவிகளின் விழிப்புணர்வுப் பேரணி உதகையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இப்பேரணியை மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தொடங்கி வைத்தார். உதகை நகராட்சி, கூடு தொண்டு நிறுவனம் ஆகியவை இணைந்து மாவட்ட நிர்வாகத்துடன் நடத்திய இப்பேரணியில் பல்வேறு பள்ளிகளின் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். பேரணியானது, மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் தொடங்கி, முக்கியச் சாலைகள் வழியாக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட திறந்தவெளி விளையாட்டரங்கில் நிறைவடைந்தது.

இதுகுறித்து ஆட்சியர் தெரிவித்ததாவது: உதகையில் உள்ள பொதுமக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் முக்கிய வாழ்வாதாரமே சுற்றுலாப் பயணிகளின் வருகைதான். சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருவதற்கு உதகை ஏரியின் எழில்மிகு தோற்றமே காரணமாகும். எனவே, அந்த ஏரியை பாதுகாப்பது நமது கடமையாகும்.

கோடப்பமந்து நீர்வரத்து ஓடையில் குப்பைகளை கொட்டக் கூடாது. குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து கொட்டுவதோடு, கழிவுகளை அகற்றும் பணிகளில் உதகை நகராட்சிக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். உதகை ஏரியை பாதுகாப்பதோடு, கோடப்பமந்து ஓடையையும் பராமரிக்க வேண்டும் என்றார். இதில், உதகை நகர்மன்றத் தலைவர் சத்தியபாமா, நகர்மன்ற ஆணையர் (பொ) ரூபன் சுரேஷ், கூடு தொண்டு நிறுவனத்தினர், சுகாதாரப் பணியாளர்கள், அலுவலர்கள் பங்கேற்றனர்.



விழிப்புணர்வு ஊர்வலத்தை தொடங்கி வைக்கிறார் மாவட்ட ஆட்சியர் பி.சங்கர்.

---

*For a cause*




*Students taking out a rally in Udhagamandalam to keep the Ooty Lake and Kodapamund Channel clean.* - PHOTO: M.SATHYAMOORTHY

---

COIMBATORE FRIDAY 21 AUGUST 2015

## Awareness Rally on Conservation of Lake



Nilgiris Collector P Shankar flagging off an awareness rally on conservation of Ooty lake in Ooty on Thursday | EXPRESS

**Express News Service**

**Udhagamandalam:** A large number of students and officials on Thursday participated in a rally here, to create an awareness among people about the conservation of Ooty lake.

The rally was flagged off by Collector P Shankar. He said, the government had sanctioned ₹7 crore for cleaning the Ooty lake and for rejuvenating Kodappamandhu stream, which was the major source for the lake. He also said, 90 per-cent of the work on conserving the lake had been completed.

"As part of conserving the lake, dumping of plastics and other wastes should be completely avoided by people, Collector Shankar added.

A large number of students and people belonging to the NGOs and municipality participated in the rally. They also created awareness about the conservation of Ooty lake by distributing pamphlets and raising slogans.

# OOTY LAKE CONSERVATION - AWARENESS CAMPAIGN - METHODOLOGY
# OOTY LAKE & KODAPPAMUND CHENNEL CONSERVATION
# AWARENESS RALLY

# A VISUAL DOCUMENTATION

**Submitted to**

**The District Collector**

**The Nilgiris**

Subimitted by
Community organisation for oppressed and depressed upliftment
Coodu
15-A, Kongu Nagar East, Trichy Road, Roamnathapuram,
Coimbatore - 641 045, Ph : 0422 - 2316178,
Cell : 9443152661 Email : coodu_cbe@yhaoo.co.in




Subimitted by
Community organisation for oppressed and depressed upliftment
15-A, Kongu Nagar East, Trichy Road, Roamnathapuram,
Coimbatore - 641 045, Ph : 0422 - 2316178,
Cell : 9443152661 Email : coodu_cbe@yhaoo.co.in

Coodu